ஸ்ரீபெரும்புதூர் பாக்ஸ்கானில் பணிபுரியும் பெண்களுக்காக

ரூ.706½ கோடி செலவில் சிப்காட் மெகா குடியிருப்பு வளாகம்: மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, ஆக. 18–

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் 42 சதவீத பெண்கள் தொழிற்சாலைகளில் பணிபுரிகிறார்கள் என்று ஸ்ரீபெரும்புதூர் சிப்காட் மெகா குடியிருப்பு வளாக திறப்பு விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (சிப்காட்) சார்பில் காஞ்சீபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் வட்டம் வல்லம் வடகால் கிராமத்தில், பாக்ஸ்கான் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களுக்காக ரூ.706 கோடியே 50 லட்சம் செலவில் 18,720 படுக்கைகள் கொண்ட சிப்காட் மெகா குடியிருப்பு கட்டப்பட்டுள்ளது.

இந்த குடியிருப்பு வளாகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று மாலை திறந்து வைத்தார். மேலும், குடியிருப்புகளுக்கான சாவியை பெண் பணியாளர்களிடம் வழங்கியதுடன் மரக்கன்றுகளை நட்டுவைத்தார்.

விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

தைவான் நாட்டைச் சேர்ந்த பாக்ஸ்கான், உலகத்திலேயே மிகப்பெரிய மின்னணுவியல் உற்பத்தி நிறுவனம். உலகளவில் புகழ்பெற்ற ஆப்பிள் நிறுவனத்தின் ஐபோன்களுக்கான உதிரி பாகங்களை பொருத்தி ஒருங்கிணைக்கும் நிறுவனம் இது.

12 நாடுகளில் தன்னுடைய உற்பத்தி நிறுவனங்களை அமைத்திருக்கிறது. இந்த குழுமம் தமிழ்நாட்டில் ஸ்ரீபெரும்புதூரில் 2 உற்பத்தி அலகுகளை நிறுவி இருப்பது நமக்கு கிடைத்திருக்கக்கூடிய மிகப்பெரிய பெருமை.

ரூ.2 ஆயிரம் கோடி முதலீட்டில் தொடங்கப்பட்ட இந்த திட்டத்தில் 41 ஆயிரம் பணியாளர்கள் வேலை செய்கிறார்கள் என்றால் அதில் 35 ஆயிரம் பேர் பெண்கள். ஆணுக்கு

பெண் சமம் என்பதை தாண்டி ஆண்களைவிட, கூடுதலான பெண் தொழிலாளர்கள் இருப்பதை பெண் எனும் பேராற்றலுக்கு தரும் முக்கியத்துவமாகவே பார்க்கிறேன்.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்தையும்விட, தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில்தான் அதிகமாக இருக்கிறது. அதாவது 42 சதவீதம் என்ற அளவில் இருக்கிறது. அந்த வகையில், உங்கள் நிறுவனத்தின் சமத்துவ நோக்கத்தை பாராட்டுகிறேன். பெண்களின் வளர்ச்சிக்காக தமிழ்நாடு எத்தனையோ திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

2வது பொருளாதார மாநிலம்

நம்முடைய திராவிட மாடல் அரசு 2021ம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றதும் தமிழ்நாட்டை இந்தியாவில் மட்டுமல்லாமல், தெற்கு ஆசியாவிலேயே முன்னணி மாநிலமாக உருவாக்க வேண்டும் என்று லட்சிய இலக்கை கொண்டு செயல்பட்டு வருகிறது. அதில் வெற்றியும் பெற்று வருகிறோம்.

2023–2024ம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.19 சதவீத பங்களிப்போடு தமிழ்நாடு, இந்தியாவிலேயே 2வது பெரிய பொருளாதார மாநிலம் என்ற நிலையை தக்க வைத்துக்கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே பன்முகத்தன்மையோடு, தொழில் துறைக்கு சாதகமான எல்லா அம்சங்களும் ஒருங்கே அமையப்பெற்ற மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது.

2021ல் நம்முடைய அரசு பொறுப்பேற்றது முதல், தொழில் வளர்ச்சிக்காக பல்வேறு சிறப்பு திட்டங்களை தொடங்கி செயல்படுத்திக்கொண்டு வருகிறோம். 'பரவலான வளர்ச்சியே பார் போற்றும் வளர்ச்சி, சீரான வளர்ச்சியே சிறப்பான வளர்ச்சி' என்பதை உறுதி செய்யும் வகையில், நம்முடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டில் தொழிற் பூங்காக்கள் இல்லாத மாவட்டங்களில், புதிதாக தொழிற் பூங்காக்கள் அமைக்க முடிவெடுத்தோம்.

அதேபோல், 45 ஆயிரம் ஏக்கர் நில வங்கி உருவாக்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்திருந்தேன். இப்போது வரைக்கும், 41 ஆயிரம் ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டிருக்கிறது. அதனுடைய, சுமார் 12 ஆயிரத்து 500 ஏக்கர் நிலங்கள் சிப்காட் நிலவங்கியில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

2030ம் ஆண்டுக்குள், ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு வளர்ச்சி அடைய வேண்டும் என்று நான் ஒரு லட்சிய இலக்கை நிர்ணயித்திருக்கிறேன். தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறையின் சிறப்பான செயல்பாடுகள், அந்த இலக்கை நாம் விரைவாக எட்டுவோம் என்று நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், சி.வி.கணேசன், டி.ஆர்.பி.ராஜா, பாக்ஸ்கான் நிறுவனத்தின் தலைவர் யாங் லீயு, டி.ஆர்.பாலு எம்பி, கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், இந்தியாவுக்கான தைவான் நாட்டு தூதர் பவுசன் ஹேர், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கி.செந்தில்ராஜ், காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி மோகன், காஞ்சீபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் கே.ஆர்த்தி, ஸ்ரீபெரும்புதூர் ஒன்றிய குழு தலைவர் எஸ்.டி.கருணாநிதி, ஸ்ரீபெரும்புதூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் கோபால், ஸ்ரீபெரும்புதூர் ஒன்றிய குழு துணைத் தலைவர் மாலதி போஸ்கோ உள்பட பலர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியத் தலைவராக ஓய்வுபெற்ற போலீஸ் டிஜிபி சுனில்குமார் நியமனம்

சென்னை, ஆக.18–

தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியத்தின் தலைவராக பதவி வகித்த டி.ஜி.பி. சீமா அகர்வால் புதிதாக உருவாக்கப்பட்ட சென்னை சிவில் சப்ளை சிஐடி பிரிவு டி.ஜி.பி.யாக சமீபத்தில் நியமிக்கப்பட்டார். இந்த நிலையில் தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியத்தின் தலைவராக ஓய்வுபெற்ற டி.ஜி.பி. சுனில்குமார் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை தமிழக அரசு நேற்று பிறப்பித்தது.

1988ம் ஆண்டு ஐ.பி.எஸ். அதிகாரியான சுனில்குமார் கடந்த 2021ம் ஆண்டு சிவில் சப்ளை சிஐடி பிரிவில் டி.ஜி.பி.யாக பணியாற்றி ஓய்வு பெற்றார். இவர், ஏற்கனவே தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியத்தில் ஐ.ஜி., கூடுதல் டி.ஜி.பி., டி.ஜி.பி.யாக பணியாற்றி இருக்கிறார். தற்போது ஓய்வுபெற்ற பின்னரும் அவருக்கு இந்த பதவி கிடைத்துள்ளது.

சதுர்த்தி பண்டிகைக்கு 10 அடிக்குள் விநாயகர் சிலை கட்டுப்பாடு

போலீஸ் டி.ஜி.பி. சுற்றறிக்கை

சென்னை, ஆக.18–

விநாயகர் சதுர்த்தி பண்டிகையை யொட்டி விநாயகர் சிலைகளை நிறுவுவதற்கு போலீசார் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

விநாயகர் சதுர்த்தி பண்டிகை அடுத்த மாதம் (செப்டம்பர்) 7ம் தேதி கொண்டாடப்படுகிறது. இதை யொட்டி தமிழகம் முழுவதும் இந்து முன்னணி, விசுவ இந்து பரிஷத் உள்பட இந்து அமைப்புகள், பாரதீய ஜனதா, இந்து மக்கள் கட்சி சார்பில் பொது இடங்களில் விநாயகர் சிலைகளை நிறுவுவதற்கு ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். இந்த ஆண்டு கூடுதல் இடங்களில் விநாயகர் சிலைகளை நிறுவுவதற்கு திட்டமிட்டுள்ளனர்.

சென்னையில் 65 அமைப்புகள் அனுமதி கேட்டு விண்ணப்பித்து உள்ளன. இதற்கிடையே பயங்கரவாத அச்சுறுத்தலும் இருந்து வருகிறது.

இந்த நிலையில் விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாட்டத்துக்கான கட்டுப்பாடுகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தமிழக போலீஸ் டிஜிபி சங்கர் ஜிவால் அனைத்து போலீஸ் கமிஷனர்கள், மண்டல ஐ.ஜி.க்களுக்கு சுற்றறிக்கை அனுப்பி உள்ளார். அதில் கூறியிருப்பதாவது:

★ தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் வகுத்துள்ள விதிமுறைகளின்படி ரசாயன கலவை இல்லாத விநாயகர் சிலைகளை மட்டுமே வைக்கப்பட வேண்டும்.

★ விநாயகர் சிலைகள் நிறுவும் அமைப்பினர் போலீஸ் கமிஷனரகங்கள் செயல்படும் மாவட்டங்களில் உதவி கமிஷனர்களிடமும், மற்ற மாவட்டங்களில் ஆர்டிஓ அல்லது துணை கலெக்டரிடம் முன் அனுமதி பெற வேண்டும்.

★ தனி நபர்களுக்கு சொந்த மான இடங்களில் நிறுவப்படும் சிலைகளுக்கு அதன் உரிமையாளர்களிடம் தடையில்லா சான்று பெற வேண்டும். பொது இடங்களை பொறுத்தமட்டில் உள்ளாட்சி அமைப்புகளின் அனுமதி அவசியம் ஆகும்.

★ ஒலிப்பெருக்கிகள் வைப்பதற்கு போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் உரிய அனுமதி பெற வேண்டும்.

★ எங்கிருந்து மின்சாரம் பெறப்படுகிறது என்ற விவரத்தை கடிதம் மூலம் மின்சார வாரியத்துக்கு தெரியப்படுத்த வேண்டும்.

சிலை 10 அடிக்கு மேல்...

★ விநாயகர் சிலைகள் மேடையுடன் சேர்த்து 10 அடிக்கு மேல் இருக்க கூடாது.

★ பிற வழிபாட்டுத்தலங்கள், ஆஸ்பத்திரிகள், கல்வி நிறுவனங்கள் அருகே சிலைகள் வைக்கக்கூடாது.

★ இதர மதத்தை சேர்ந்த மக்களின் உணர்வுகளை புண்படுத்தும் வகையில் கோஷங்கள் எழுப்ப கூடாது.

★ விநாயகர் சிலைகள் நிறுவப்படும் இடங்கள், ஊர்வலம் செல்லும் பாதைகளில் பட்டாசு வெடிக்கக்கூடாது.

★ விநாயகர் சிலைகளை மினி லாரி, டிராக்டர் மூலம் மட்டுமே எடுத்து செல்ல வேண்டும். மாட்டு வண்டி, 3 சக்கர வாகனங்களில் எடுத்து செல்லக்கூடாது. இவ்வாறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு உள்ளது.

கடந்த ஆண்டுகளில் விநாயகர் சதுர்த்தி பண்டிகையின்போது ஏற்பட்ட அச்சுறுத்தல் சம்பவங்களை சுட்டிக்காட்டி போலீசாருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றிய அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளது.அதன் விவரம் வருமாறு:

★ சட்டம்–ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் வகையில் சமூக விரோதிகள் சிலைகளை சேதப்படுத்துவதை தடுக்க வேண்டும்.

★ புதிய மற்றும் பதற்றமான இடங்களில் சிலைகள் வைத்தால் சட்டம்–ஒழுங்கு பிரச்சினை ஏற்படலாம் என்பதால் அதனை அனுமதிக்க கூடாது.

★ மசூதிகளில் தொழுகை நடைபெறும் நேரங்களில் விநாயகர் சிலைகள் ஊர்வலத்தை அனுமதிக்க கூடாது.

★ விநாயகர் சிலைகள் ஊர்வலத்தை புதிய வழித்தடங்கள், பதற்றமான பகுதிகள் வழியாக அனுமதிக்கக்கூடாது. மற்ற வழிப்பாட்டுத்தலங்களை ஊர்வலம் கடக்கும்போது பட்டாசுகளை வெடிக்கவும், மேள தாளங்களை இசைக்கவும் அனுமதிக்க கூடாது.

★ விநாயகர் சிலைகள் வைக்கப்படும் இடங்கள், ஊர்வலம் செல்லும் பாதைகளில் உரிய அனுமதி இல்லாமல் பேனர்கள் வைப்பதையும், கொடிகள் கட்டுவதையும் தடுக்க வேண்டும்.

★ விநாயகர் சதுர்த்தி பண்டிகை, சிலைகள் ஊர்வலம் பாதுகாப்பு ஏற்பாடு நடவடிக்கைகளை வருகிற 30ம் தேதிக்குள் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

நாளை பவுர்ணமி: திருவண்ணாமலைக்கு சிறப்பு பஸ்கள் இயக்கம்

அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் அறிவிப்பு

சென்னை, ஆக.18–

நாளை பவுர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலைக்கு சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குனர் மோகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

நாளை (திங்கட்கிழமை) பவுர்ணமியை முன்னிட்டு இன்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் 20 ம் தேதி வரை சென்னை மற்றும் பல்வேறு இடங்களில் இருந்து திருவண்ணாமலைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் கூடுதலாக சிறப்பு பஸ்களை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து இன்று (ஞாயிற்றுக்கிழமை) 130 பஸ்களும் நாளை(திங்கட்கிழமை) 250 பஸ்களும், கோயம்பேட்டில் இருந்துஇன்று(ஞாயிற்றுக்கிழமை) 30 பஸ்களும், நாளை(திங்கட்கிழமை) மாதாவரத்தில் இருந்து தினசரி இயக்ககூடிய பஸ்களுடன் 40 பஸ்களும் கூடுதலாக இயக்கப்படும்.

மேலும், பல்வேறு இடங்களில் இருந்து திருவண்ணாமலைக்கு நாளை 265 பஸ்கள் தினசரி இயக்ககூடிய பஸ்களுடன் கூடுதலாக இயக்கப்படும்.

அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் மூலமாக இருக்கை மற்றும் படுக்கை வசதி கொண்ட 50 ஏ சி பஸ்கள் சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலைக்கு நாளை (திங்கட்கிழமை) இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் மதுரை, சேலம், கோவை, ஈரோடு, திருப்பூர், நெல்லை, நாகர்கோவில், தென்காசி, தூத்துக்குடி மற்றும் ஒசூர் ஆகிய இடங்களிலிருந்து திருவண்ணாமலைக்கு அரசு பேருந்துகளில் முன்பதிவு செய்து பய ணிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மாண்பமை சார்பு நீதிமன்றம், ஆலந்தூர்
அசல் வழக்கு எண் 78/2023
ஸ்ரீநாத் & கோ
உரிமையாளர்
K.சுப்பிரமணியன் –வாதி
Vs
திரு. மோகன்
உரிமையாளர், M.V. டிரேடர்ஸ் –பிரதிவாதி
பெறுநர்
திரு. மோகன்
உரிமையாளர், M.V. டிரேடர்ஸ்
எண் 152/12, பிளாக்,
லோட்டஸ் காலனி, அண்ணா நகர், சென்னை 600 102
மற்றும்
திரு. மோகன்
உரிமையாளர், M.V. டிரேடர்ஸ்
C/o பாபா அட்ஸ்
C-47, கடை எண் 40, அண்ணா நகர் பிளாசா, 2 வது நிழற் சாலை, அண்ணா நகர், சென்னை – 600 40

மேற்கண்ட வாதி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு தங்கள் வருகைக்காக 03.09.2024 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. தாங்கள் அன்று காலை 10.30 மணிக்கு நேரிலோ வழக்கறிஞர் மூலமோ ஆஜராக அறிவுறுத்தப்படுகிறீர்கள். தவறும்பட்சத்தில் வழக்கு தாங்கள் இல்லாமலேயே ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

K.வெங்கடேசன்
மனுதாரர் வழக்கறிஞர்

ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.
பதிவு அலுவலகம் : 501, சல்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புதுடெல்லி –110025
CIN : U65900DL2020PLC366027

ஏல அறிவிப்பு

வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அறிவிப்புகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அனுப்பியபோதிலும், வங்கியிடமிருந்து பெற்ற தங்க நகை கடன்/கள் அவர்களால் சரி செய்யப்படவில்லை என்பதை ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். வங்கியில் செக்யூரிட்டியாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது, அதன்படி 28.08.2024 அன்று மாலை 03:00 மணிக்கு கடன் பெற்ற கிளை வளாகத்தில் ஏலம் விடப்படும் என்று அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் வாங்கியவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் இந்த ஏலத்தில் பங்கேற்கலாம்.

கிளை	கணக்கு எண்	கணக்கு வைத்திருப்பவர் பெயர்	தந்தை/ மனைவி பெயர்	முகவரி	கணக்கு துவக்க தேதி	செலுத்த வேண்டிய தொகை
சென்னை	104142510498	ராஜேந்திர குமார்.	த/பெ. நீதிமாணிக்கம்	117, வித்யா நகர், திருநின்றவூர், நடுகுத்தகை, திருவள்ளூர், தமிழ்நாடு 602024	12/04/2024	75788.30
சென்னை	104142510497	ராஜேந்திர குமார்.	த/பெ. நீதிமாணிக்கம்	117, வித்யா நகர், திருநின்றவூர், நடுகுத்தகை, திருவள்ளூர், தமிழ்நாடு 602024	12/04/2024	176451.22
சென்னை	104142510433	பிரேம்குமார்	த/பெ. அழகுராஜ்	கதவு எண் 5 2 21A, கிழக்கு தெரு, வீரபாண்டி (TP), தேனி, முத்துத்தேவன்பட்டி தமிழ்நாடு 625534	28/03/2024	50164.64
சென்னை	104142510430	பிரேம்குமார்	த/பெ. அழகுராஜ்	கதவு எண் 5 2 21A, கிழக்கு தெரு, வீரபாண்டி (TP), தேனி, முத்துத்தேவன்பட்டி தமிழ்நாடு 625534	28/03/2024	194864.95
சென்னை	104142510431	பிரேம்குமார்	த/பெ. அழகுராஜ்	கதவு எண் 5 2 21A, கிழக்கு தெரு, வீரபாண்டி (TP), தேனி, முத்துத்தேவன்பட்டி தமிழ்நாடு 625534	28/03/2024	32899.95
சென்னை	104142510527	ஜெகதீஸ்வரன் பி	த/பெ. பாலு	புதிய எண் 130, காமராஜ் நகர் 3வது தெரு, சூளைமேடு, சென்னை தமிழ்நாடு 600094	18/04/2024	168046.13
சென்னை	104142510112	எட்வின் பி வில்லியம்ஸ்	த/பெ. வில்லியம்ஸ்	2170 B 3வது பிரதான சாலை எம்எம்டிஏ, மாத்தூர், மணலி, திருவள்ளூர், தமிழ்நாடு 600068	12/01/2024	73433.71
சென்னை	104142510227	பராஸ் ஏ எஸ்	த/பெ. சலீம் அக்தர் ஜி	20/68, தரை தளம் அசர்கானா தெரு, ஆலந்தூர் சென்னை காஞ்சிபுரம் தமிழ்நாடு 600016	13/02/2024	124319.67
சென்னை	104142510356	புருஷோத்தமன் மோகன்	த/பெ. மோகன்	16/36, சாவடி 1வது குறுக்குத் தெரு, கொரட்டூர், திருவள்ளூர், தமிழ்நாடு 600080	11/03/2024	38951.68
சென்னை	104142510386	விவேகானந்தன் எஸ்	த/பெ. சரவணன்	22, ராஜேந்திரன் தெரு, திருநகர், வளசரவாக்கம், ஆழ்வார்திருநகர், திருவள்ளூர் தமிழ்நாடு 600087	16/03/2024	213370.49
சென்னை	104142510409	ஹரி ஜே பி	த/பெ. பத்மநாபன்	3/20, வேம்புலி தெரு, செந்தமிழ் நகர், ராமாபுரம், திருவள்ளூர், தமிழ்நாடு 600089	23/03/2024	212338.82
சென்னை	104142510410	நிவேதா உதயகுமார்	C/o. உதயகுமார்	5/17, பிள்ளையார் கோயில் தெரு, பாரதி நகர், ராமாபுரம், திருவள்ளூர் தமிழ்நாடு 600089	23/03/2024	205139.33
சென்னை	104142510408	அம்மு எஸ்	த/பெ. செல்வராஜ்	5/17, பிள்ளையார் கோயில் தெரு, பாரதி நகர், ராமாபுரம், திருவள்ளூர் தமிழ்நாடு 600089	23/03/2024	212338.82
சென்னை	104142510474	தியாகராஜன் நிஜராஜலிங்கம்	த/பெ. நிஜராஜலிங்கம்	19/2A, கிரேஸ் கார்டன் மெயின் ரோடு, ராயபுரம், சென்னை தமிழ்நாடு 600013	05/04/2024	153003.21
சென்னை	104142510492	பாலாஜி வி	த/பெ. வெங்கடேஷ்	17, காட்டூர் நல்ல முத்து தெரு, கார்ப்பரேஷன் 3 வது லேன் தாடன்குளம், சூளை சென்னை தமிழ்நாடு 600112	10/04/2024	146524.92
சென்னை	104142510500	சுந்தர் ஆர்	த/பெ. ராஜேந்திரன்	139, ராஜா பிள்ளை தோட்டம் தியாகராய நகர், சென்னை தமிழ்நாடு 600017	12/04/2024	162988.85
சென்னை	104142510517	கார்த்திகேயன் எஸ்	த/பெ. சங்கர லிங்கம்	35, வி எஸ் நகர் பிரிதிங்கரா தேவி கோயில் தெரு, தலைகஞ்சேரி அஞ்சல், திருவள்ளூர், தமிழ்நாடு 602001	16/04/2024	368472.72
சென்னை	104142510515	கார்த்திகேயன் எஸ்	த/பெ. சங்கர லிங்கம்	35, வி எஸ் நகர் பிரிதிங்கரா தேவி கோயில் தெரு, தலைகஞ்சேரி அஞ்சல், திருவள்ளூர், தமிழ்நாடு 602001	16/04/2024	199212.29
சென்னை	104142510511	முரளி சி	த/பெ. சந்திரன்	1/16, தெரு பெருங்காவூர், பெருங்காவூர் திருவள்ளூர் தமிழ்நாடு 600103	16/04/2024	28515.60
சென்னை	104142510520	எல் எஸ் மணி	த/பெ. பி ஜி லக்ஷ்மிபதி	73/33, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு, ஏழுகிணறு, சென்னை, தமிழ்நாடு 600001	17/04/2024	165761.07
சென்னை	104142510524	டி கரண்		புதிய எண் 68, பழைய எண் 81, 3வது தெரு, எல்லையம்மன் காலனி, கோபாலபுரம், வெள்ளாள தேனாம்பேட்டை சென்னை, தமிழ்நாடு 600086	18/04/2024	1699294.43
சென்னை	104142510678	எம் ஏ சாமி	த/பெ. மாரேஸ்வரன்	எண் 32, அண்ணா தெரு, பக்தவத்சலபுரம், மீனாட்சி சினிமாஸ், ஆவடி, ஆவடி திருவள்ளூர், தமிழ்நாடு 600054	25/05/2024	77723.87
சென்னை	104142510692	ரேஷ்மா வி	த/பெ. வீரபத்திரன்	2/13A, கோபால் தெரு ஜாபர்கான்பேட்டை, அசோக் நகர், சென்னை, தமிழ்நாடு 600083	29/05/2024	52257.79

ஏல தேதி 28.08.2024 அன்று மாலை 03.00 மணி

எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஏலத்தில் இருந்து எந்தவொரு கணக்கையும் நீக்க அல்லது ஏலத்தை ரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.

MANAPPURAM HOME FINANCE LTD.
மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்
முன்பு மணப்புரம் ஹோம் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
CIN: U65923K12010PIC039179,
பதிவு அலுவலகம்: IV/470A, (பழையது) W/638A (புதியது) மணப்புரம் ஹவுஸ், வளபாடு திருச்சூர், கேரளா – 680 567
கார்ப்பரேட் அலுவலகம்: மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட், 3வது தளம், யூனிட் எண்.301–315, ஏ விங், "கனக்கியா வால் தெரு", அந்தேரி குர்லா சாலை, அந்தேரி கிழக்கு, மும்பை – 400 093, மகாராஷ்டிரா.
போன்: 022–66211000, இணையதளம் : www.manappuramhomefin.com

டிமாண்ட் நோட்டீஸ்

நிறுவனங்கள் சட்டம், 1956ன் கீழ் பதிவு செய்யப்பட்ட மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட் பதிவு அலுவலகம் : IV/470A (பழையது) w/638A (புதியது), மணப்புரம் ஹவுஸ், வளபாடு, திருச்சூர், கேரளா 680567 மற்றும் இந்தியாவில் பல்வேறு இடங்களில் கிளைகளுடன் (இனி "MAHOFIN" என குறிப்பிடப்படுகிறது) செயல்படும் இந்நிறுவனம் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு நலச் சட்டம் 2002ன் (இனிமேல் சட்டம் எனக் குறிப்பிடப்படும்) பிரிவு 2ன் உட்பிரிவு (1)ன் உட்பிரிவு (m)ன் உட்பிரிவு (iv)ன் பொருளில் உள்ள நிதி நிறுவனம் மற்றும் இந்திய அரசின், நிதிச் சேவைகள் துறையின், நிதி அமைச்சகம், புதுடெல்லி வெளியிட்ட டிசம்பர் 18, 2015 தேதியிட்ட அறிவிப்பு எண். எஸ்.ஓ. 3466 (இ) ஆகியவற்றின் கீழ் கட்டுமானம் மற்றும் / அல்லது குடியிருப்பு வீடுகளை வாங்குவதற்கான கடன் வழங்கும் வணிகத்துடன் மற்ற வணிகத்தை மேற்கொண்டு வருகிறது. அதேசமயம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை வரிசை எண். 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி கடன்தாரர் / உடன் கடன்தாரர்கள் MAHOFINலிருந்து கடன் பெற்றனர் மற்றும் அதேசமயம் SARFAESI சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குனராக MAHOFIN உள்ளது மற்றும் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(2) மற்றும் விதி 2ன் கீழ் அதன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி கடன்தாரர்கள் / உடன் கடன்தாரர்கள், நோட்டீஸ்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, அறிவிப்புத் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் கூடுதல் வட்டியுடன் திருப்பிச் செலுத்துமாறு கோரிக்கை அறிவிப்பை வழங்கியிருந்தார். ஆனால் பல்வேறு காரணங்களுக்காக அவர்களில் சிலருக்கு நோட்டீஸ் வழங்கப்படவில்லை. அதுமட்டுமல்லாமல் கீழே பட்டியலிடப்பட்டுள்ள கடன்தாரர்களின் தகவல்களின் நோக்கங்களுக்காக, இந்த பொது அறிவிப்பின் மூலம் கடன் பெற்றவர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

வ. எண்.	கடன்தாரர்/உடன்கடன்தாரர் பெயர்/LAN/கிளை	ஈடுபெற்ற சொத்துக்களின் விவரம் இது தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பாத்தியதை	என்பிஏ தேதி	அறிவிப்பு அனுப்பப்பட்ட தேதி மற்றும் செலுத்த வேண்டிய தொகை
1	நதியா ஏ அமரேசன் டி லட்சுமி டி /MHL00420004084/ வேலூர்	நத்தம் எஸ். எண். 699/1ஏ1 & 699/1பி2, இந்த பிளாக் எண். 148, அகரம் கிராமம், அணைக்கட்டு தாலுக்கா, மெயின் ரோடு அருகில், வேலூர் மாவட்டம், அகரம் அஞ்சல், வேலூர், தமிழ்நாடு, பின்கோடு: 635804	04-08-2024	06-08-2024 & ரூ.4,07,077/-
2	ஏ அஷ்வாக் ஷபீனாபி எஸ் அப்துல் நசீர் நசீர் அப்துல்கரீம் /NLAP0042006612/ வேலூர்	பழைய எஸ். எண். 220/2A26, புதிய எஸ். எண். 220/2A26a, 220/2A26B & 220/2A26C, ஆர்.எஸ். எண். (புதியது) 220/6A2, மனை எண். 12, கதவு எண். 296/1, மாநகராட்சி வார்டு எண். 21, புதிய தெரு (பழைய ரேஷன் கடைத் தெரு), அலமேலுமங்காபுரம் கிராமம், அரசுப் பள்ளி அருகில், தாலுகா வேலூர், ஆம்புரம் அஞ்சல், வேலூர் மாவட்டம், தமிழ்நாடு, பின்கோடு: 632009	04-08-2024	06-08-2024 & ரூ.15,90,547/-

எனவே, மேலே குறிப்பிட்டுள்ளபடி, இந்த அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள், அந்தந்த கடன்தாரர் / உடன் கடன்தாரர்களுக்கு எதிராக, மேலே காட்டப்பட்டுள்ள மொ